அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.118/2016
தேதி.12.07.2016

# பத்திரிக்கைச் செய்தி
# ஜூலை 15ல் தென் சென்னை மேற்கு மாவட்டம் சார்பில் சென்னை விருகம்பாக்கத்தில் முப்பெரும் விழா நடைபெற உள்ளது

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் தென் சென்னை மேற்கு மாவட்டம் சார்பில் பெருந்தலைவர் பிறந்த நாள் விழா, தலைவர் பிறந்தநாள் விழா மற்றும் இயக்கத்தின் 10ஆம் ஆண்டு துவக்க விழா என முப்பெரும் விழா வருகிற 15.07.2016 அன்று மாலை 4.00 மணியளவில் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற உள்ளது.

தென் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் திரு.எம்.ஏ.கிச்சா ரமேஷ் அவர்களின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் தலைவர் புரட்சி திலகம் அவர்கள் காமராஜரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து, நலத்திட்ட உதவிகளை வழங்கி பேரூரை ஆற்ற உள்ளார். மாநில மகளிரணி செயலாளர் திருமதி.ராதிகா சரத்குமார் அவர்கள் வாழ்த்துரை வழங்கி சிறப்பிக்கிறார். மாநில பொருளாளர் திரு.ஏ.என்.சுந்தரேசன் மற்றும் மாநில நிர்வாகிகள் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

சென்னை மண்டலச் செயலாளர் திரு.எம்.ஏ.சேவியர் வரவேற்புரை ஆற்றிட சென்னை மண்டல மாவட்டச் செயலாளர்கள் முன்னிலை வகிக்கின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்கும் வகையில் விழாவுக்கான ஏற்பாடுகளை தென் சென்னை மேற்கு மாவட்ட நிர்வாகிகள் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர். பொதுக்கூட்டம் நிகழ்ச்சி தொடங்கும் முன்பாக பிரபல சென்னை சிட்டி டான்சர்ஸின் கலைநிகழ்ச்சி நடைபெறும். விருகையின் மற்றொரு பகுதியில் வாகன நிறுத்தத்திற்கு தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகம் முழுவதும் இருந்து ஆயிரக்கணக்கான நிர்வாகிகள் வருகைதர இருக்கிறார்கள்.

நமது இயக்கத்தின் தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு விழாவினை சிறப்பிக்குமாறு கேட்டு கொள்ளப் படுகிறார்கள்.

நன்றி, வணக்கம்
என்றும் அன்புடன்

ஏ.என்.சுந்தரேசன்
பொருளாளர்